[1982 மார்ச் 19

மேல் நிலைப் பள்ளிகளில் பாட ஆசிரியர்கள் நியமிக்கும் முறை

*வினா எண் 554—திரு. ஆர். கே. பெருமாள், திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல் நிலைப் பள்ளியில் பாட ஆசிரியர் போடுவதில் அவர்களது இளநிலை பட்டப்படிப்பில் உள்ள பிரதான பாடத்தை வைத்துத்தான் போடுவது என்ற முறையை அரசு கையாளுமா ?

(ஆ) ஆம் என்றால், எப்பொழுது முதல் அமுல்படுத்தப் படும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) மேல்நிலைப் பள்ளிகளில் பாட ஆசிரியர்களை நியமிக்கும் போது இளநிலை, முதுநிலை பட்டப்படிப்பில் ஒரே பாடத்தை எடுத்துள்ள ஆசிரியர்களுக்கு முதலுரிமை அளிக்கப்படுகிறது. இம்முறை 1981—82 ஆம் ஆண்டு கல்வியாண்டு தொடக்க முதற் கொண்டு அமுல்படுத்தப்படுகிறது.

(முற்பகல் 9—30)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல அரசு வெளியிட்ட ஆணை மிக தெளிவாக இருக்கிறது. பி.ஏ.-விலே ஒரு பாடமும் எம்.ஏ.-விலே வேறு பாடமும் எடுத்தவர்களும், பி.ஏ.-விலும், எம்,ஏ.-விலும் ஒரே பாடம் எடுத்தவர்களும் நேர்முகத் தேர்வுக்கு வரும் போது அவர்களுடைய மற்றத் தகுதிகளிலே முந்தைய பதவி, அவர்கள் எடுத்த மதிப்பெண்கள் இவைகளிலே சரிநிகராக இருக்கும்போது, இரண்டிலும் ஒரே பாடம் எடுத்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆனால் கல்வித் துறை இயக்குநருடைய ஒரு சர்க்குலர், இரண்டிலும்; ஒரே பாடத்தை எடுத்தவர்களைத்தான் எடுக்கவேண்டும். அவர்கள் இல்லாதபொழுதுதான் மற்றவர்களை எடுக்க வேண்டுமென்று விதித்திருக்கிறது. ஆகவே அரசு அதைப் பரிசீலித்து அந்தக் கல்வித் துறை இயக்குநருடைய சர்க்குலரைத் திருத்த பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்,

1982 மார்ச் 19]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இளங்கலை படிப்பிலும் முதுகலை படிப்பிலும் ஒரே பாடத்தை எடுத்தவர்களுக்கு முன்னுரிமை என்ற விதத்தில் ஒரு சலுகை அளிக்கப்படுகிறது. அந்த அடிப்படையிலேதான் இயக்குநருடைய உத்தரவு இருக்கும் என்று கருதுகிறேன். அதற்கு மாறாக இருக்குமேயானால் அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி பரிசீலிக்கின்ற பொழுது, முழுக்க இல்லாவிட்டாலும், பி.ஏ.-விலும், எம்.ஏ.-விலும் ஒரே பாடம் எடுத்தவர்களுக்கு உயர்ந்தபட்சச் சதவீதம் என்றாலும், பி.ஏ.-விலே ஒரு பாடமும் எம்.ஏ.-விலே ஒரு பாடமும் எடுத்து மிகச் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றிருந்தாலும்கூட, அந்த சர்க்குலர்படி பணி கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு ஒரு குறைந்த அளவு சதவீதமாவது ஒதுக்குகின்ற நிலையை அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இரண்டு பட்டப் படிப்பிலேயும் ஒரே பாடத்தை எடுத்தவர்களைத்தான் முறையான ஒரு தகுதி அடைந்தவர்களாக இன்றைய நிலையிலே நாம் கருதுகிறோம். ஆகவேதான் இந்த ஒரு முன்னுரிமையைத் தருகிறோம். அவர்கள் கிடைக்காத காலத்திலே இளங்கலையிலே ஒரு பாடமும் முதுகலையிலே ஒரு பாடமும் எடுத்தவர்களை வைக்கலாம் என்பதுதான் இப்பொழுதிருக்கிற நிலைமை. அதை நாம் மாற்றி அமைப்போமானால் நாம் தருகின்ற அந்த முன்னுரிமை அல்லது அந்தச் சலுகை அல்லது நாம் எதிர்பார்க்கிற நோக்கம் நிறைவேறாமல் போய்விடும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளிலே ஆசிரியர்களாகப் பணியாற்றுபவர்களுக்கு பி.டி. பட்டம் கட்டாயமாக வைக்கப்படவில்லை. ஆனால், உயர்நிலைப் பள்ளிகளிலே ஆசிரியர்களாக சேர்பவர்களுக்கு பி.டி. படிப்பு இருகக வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுகிறது. அதைத்தவிர்க்க முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கல்லூரியிலே ஆசிரியர்களாக வருகின்றவர்களுக்கு முதுகலைப் பாடம் என்று மட்டும்தான் நாம் பேசுகின்றோமே தவிர, அதிலே அவர்கள் உயர்ந்த தகுதியைப் பெற்றிருக்க வேண்டும். அதிலும் இப்பொழுது, எம்.பில்., பி.எச்டி.,

பெற்றிருக்க வேண்டும், பெற வேண்டுமென்று நாம் சொல்லிக் கொண்டு வருகிறோம். கலலூரி ஆசிரியர்களுடைய தகுதி உயர்நிலையிலே இருக்கிறது. பள்ளி ஆசிரியர்களுக்கு நாம் முதுகலைப் பட்டம் பெற்றிருந்தால் போதும் என்றுதான் சொல்கிறோமே தவிர, உயர்ந்த அளவுத் தகுதி அதிலே பெற வேண்டுமெனறு சொல்லவில்லை. ஆனால், பி.டி. பட்டம் தேவை என்று சொல்வதற்குக் காரணம், வகுப்புமுறை போதனா முறையை நாம் பயன்படுத்த வேண்டும். அந்த அளவு குழந்தைகளுக்கு அந்த பி.டி. படித்த ஆசிரியர்கள் மூலமாகப் பயிற்சி தருவதுதான் சிறந்தது என்று கருதித்தான் கல்லூரி யிலே இருந்துகொண்டிருந்த அந்த வகுப்பை நாம் பள்ளி களுக்குக் கொண்டுவந்திருக்கிறோம். ஆகவே, பயிற்சிபெற்ற ஆசிரியர்களுடைய போதனையை அந்தக் குழந்தைகளுக்குக் கிடைக்கச் செய்வதுதான் அரசினுடைய நோக்கம்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்களாகப் பணியாற்ற முழுத் தகுதி பெற்ற எம்.ஏ., பி.எச்.டி., போஸ்ட் கிராஜுவேட்ஸ் பலர் இன்னும் உயர்நிலைப் பள்ளிகளிலே பணியாற்றுவது உண்மையா ? அவர்களை மேநிலைப் பள்ளிகளில் பணியாற்றச் செய்வதற்கான வாய்ப்பை அரசு கொடுக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாணபுமிகு தலைவர் அவர்களே, நமக்குத் தேவையான நிலைகளில் அப்படிப் பட்ட ஆசிரியர்களுக்கு நாம் வாய்ப்புகளைத் தந்து கொண்டு வருகிறோம். அதற்காகத் தகுதி படைத்த ஆசிரியர்களுக் கெல்லாம் நாம் வேலை தரமுடியும் என்று சொல்ல முடியாது.

கல்லூரி மாணவர்களின் தேர்வு முடிவுகளை வெளியிடுவதில் ஏற்படும் காலதாமதம்.

*வினா எண் 555—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கலவி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரி மாணவர்களின் தேர்வு முடிவுகளை அறி விப்பதில் அசாதாரண காலதாமதம் ஏற்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் இக் குறையை களைந்து விரைவில் தேர்வு முடிவுகளை வெளியிட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.